தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613010
தமிழ்நாடு, தென்னிந்தியா
தொ.பே.எண் : 04362 – 227151
மின்னஞ்சல் : coetamiluniv@gmail.com

THE TAMIL UNIVERSITY
THANJAVUR – 613010
SOUTH INDIA, TAMIL NADU
TEL EPHONE : 04362 - 227151
EMAIL : coetamiluniv@gmail.com

முனைவர் பெ. இளையாப்பிள்ளை
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)

நாள் :17.112023

சுற்றறிக்கை

ந.க.எண். தே3 / 2023 நாள் 17.11.2023

பொருள்: முதுகலைப் பாடப்பிரிவுகள் – முதலாமாண்டு முதல் பருவம், இரண்டாமாண்டு மூன்றாம் பருவம், பட்டயம் / சான்றிதழ் தேர்வுகள் – தேர்வுக் கால அட்டவணை வெளியிடுதல், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற விவரங்கள் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: துணைவேந்தரவர்களின் ஆணை, நாள் : 16 .11.2023.

------

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிற்பம், இசை, நாடகம், கடல்சார் வரலாறு மற்றும் தொல்லியல், இலக்கியம், மொழியியல், மெய்யியல், பழங்குடி மக்கள் ஆய்வு மையம், சமூக அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், கணிப்பொறி அறிவியல் மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகிய துறைகளின் வழி நடத்தப்பெறும் முதுகலை, முதுநுண்கலை, முது அறிவியல் ஆகியப் பாடப்பிரிவுகளில் சேர்க்கைப் பெற்ற மாணவர்களுக்கு முதல், மூன்றாம் பருவத்திற்கான தேர்வுகள் மற்றும் நிலுவைத்தாள்கள் எழுதும் மாணவர்கள், சிற்பம், கணிப்பொறி அறிவியல், அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் பட்டயம், சான்றிதழ் தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் திசம்பர் 2023க்கான தேர்வுகள் 11.12.2023 முதல் 22.12.2023 வரை நடைபெறவுள்ளன.

இத்தேர்வுகளுக்கான கால அட்டவணை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளதோடு தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டண விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன. தேர்வுகள் குறித்த விவரங்களை துறைத்தலைவர்கள் மாணவர்களுக்குத் தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தேர்வுக் கட்டண விவரம்

முதுகலை, முதுநுண்கலை, முது அறிவியல்

(முதல் பருவம், மூன்றாம் பருவத் தேர்வுகள்)

| வ.எண் | தேர்வுக் கட்டண விவரம் | சிற்பம் / இசை / நாடகம் | வரலாறு | சமூகப்பணி | தமிழ் / மொழியியல்/ மெய்யியல்/ பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | முது அறிவியல் | பட்டயம்/ சான்றிதழ் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பக் கட்டணம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 2 | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 3 | • தேர்வுக் கட்டணம் தாள் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம்<br>• செய்முறைத் தேர்வுக் கட்டணம் தாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம்<br>• சான்றிதழ் கட்டணம் ரூ.300/- (பட்டயம் மற்றும் சான்றிதழ் மாணவர்கள் மட்டும்) | | | | | | |

கட்டணம் செலுத்த இறுதி நாள்:

- தேர்வுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள்: 04.12.2023
- ரூ. 100/- தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள்: 05.12.2023
- ரூ. 500/- தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள்: 08 .12.2023

பருவக் கட்டணங்களைத் தவறாது செலுத்திய மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத இயலும். பருவக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு நகல் இணைக்கப்பட வேண்டும். ஒருமுறை செலுத்தப் பெற்ற தேர்வுக் கட்டணங்களை எந்த ஒரு நிலையிலும் மீளப் பெறவோ அல்லது அடுத்து வரும் தேர்வுக்கு ஈடுசெய்யவோ இயலாது. ஒரு பருவத் தேர்விற்கு முதல் முறை விண்ணப்பிக்கும்போது அனைத்துத் தாள்களுக்கும் சேர்த்தே தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உரிய காலத்தில் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தாதவர்கள் தேர்வினை எழுத இயலாது.

தேர்வு எழுதும் மாணவர்கள் சேர்க்கை எண்ணைச் சரியாக எழுத வேண்டும். தவறான சேர்க்கை எண்ணைக் குறிப்பிட்டு எழுதினால் அந்த விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. இதற்குப் பல்கலைக்கழகம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது. வருகைப் பதிவு (75%முதல் 65% விழுக்காடு வரை) உள்ள மாணவர்கள் மருத்துவச் சான்றிதழ் அடிப்படையில் தண்டக்கட்டணம் ரூ. 250/- செலுத்த வேண்டும். மேலும், பூர்த்தி செய்த தேர்வு விண்ணப்பப் படிவங்களை வளாகக்கல்வித் தேர்வுப் பிரிவில் சமர்ப்பிக்காமல் தேர்வுகளை எழுதும் மாணவர்களின் விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

17.11.23

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ.)

17.11.23

பெறுநர்

துறைத்தலைவர்கள்

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை
4. அரியகையெழுத்துச் சுவடித் துறை
5. கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை
6. சமூக அறிவியல் துறை
7. இலக்கியத்துறை
8. மொழியியல் துறை
9. மெய்யியல் துறை
10. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
11. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை
12. கணிப்பொறி அறிவியல் துறை
13. இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
14. முதுகலை மாணவர்கள் (சுற்றுக்கு) – உரிய வழியாக
15. பட்டயம் மற்றும் சான்றிதழ் மாணவர்கள் (சுற்றுக்கு) – உரிய வழியாக

நகல்

1. துணைவேந்தரவர்கள் செயலகம் 2. பதிவாளர் செயலகம்
3. நிதிப்பிரிவு 4. சேர்க்கைப்பிரிவு ,
5. பொறியியல் பிரிவு (மின் விசிறி மற்றும் மின் விளக்குகள் சரிபார்த்தல்)
6. மக்கள் தொடர்பு பிரிவு (தூய்மைப் பணி)